வணக்கம்
ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர் – நாராயணசாமி
தேதி 28.09.2026 நேரம் மாலை 6.10 மணி

---

## தலைப்புச் செய்திகள்

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்று, உரிய தகவல்களை வழங்க, ஒவ்வொருவரும் நேரம் ஒதுக்க வேண்டும் என,பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் கல்வித் துறையில், பெரும் மாற்றங்களை கொண்டு வருவதில், தேசிய கல்விக் கொள்கை முக்கிய பங்காற்றி வருகிறது.

குறிப்பிட்ட யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் விதிப்பதான மத்திய அரசின் முடிவை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், சமூக பாதுகாப்புத திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

-------------------------

## மோடி சென்செஸ் (9)

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்று, உரிய தகவல்களை வழங்க, ஒவ்வொருவரும் சிறிது நேரம் ஒதுக்க வேண்டும் என,பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். நேற்று மன் கீ பாத் நிகழ்ச்சியில் இதுகுறித்து தாம் வெளியிட்ட வேண்டுகோளை, இன்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் நினைவு கூர்ந்து, மக்கள் தொகை கணக்கெடுப்பில்

பங்கேற்பது, நாட்டு மக்களின் தேசிய கடமை என்று கூறியுள்ளார். மக்கள் தொகை கணக்கெடுப்பில் ஒவ்வொருவரும் பங்கேற்று, தேவையான விவரங்களை வழங்குவதால், நாட்டின் எதிர்காலம் குறித்து தெளிவான சித்திரம் ஒன்றை உருவாக்க ஏதுவாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

------------------------

## சேவா சங்கல்ப் 1 (12)

மக்கள் சேவை மூலமான தேச சேவை என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், பொது சேவையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் சேவைப் பயணம், இன்று வரை அயராத உறுதிப்பாட்டுடன் தொடர்ந்து நீடிக்கிறது. சேவை மற்றும் நல்லாட்சி என்னும் பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப, 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை நோக்கி, நாடு தொடர்ச்சியாக பயணித்து வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி-அனைவருக்கும் சமூக அதிகாரம் என்னும் அரசின் கொள்கையினால், நாட்டு மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்கு பார்வையினால், நாட்டின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து, இன்று, சேவா சங்கல்ப் அபியான் என்னும் இந்த சிறப்பு தொடரில் காண்போம்............

(வாய்ஸ்)

## சேவா சங்கல்ப் 2 (18)

(வாய்ஸ்)

இந்தியாவின் பள்ளிக் கல்வித் துறையில், 1968ஆம் ஆண்டு முதல் நிலவிய Ten + Two கட்டமைப்பு, 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கையின் கீழ், Ten + Three + Three + Four என்பதாக மாற்றப்பட்டது. 3 வயதில் இருந்தே தொடங்கி, 18 வயது வரை, பள்ளிக் கல்வியை தொடரும் வகையிலான இந்த ஏற்பாட்டினால், கல்விக்கு மிக முக்கியமான குழந்தைகளின் அடிப்படை வயதுகளும் முதல் முறையாக, கல்விக் கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 5 வயது வரை குழந்தைகளின் தாய்மொழியே பயிற்று மொழியாக மாற்றப்பட்டுள்ளது. கலை, அறிவியல், வணிகவியல், தொழில் கல்வி என பலப் பிரிவுகளாக கல்விக் கட்டமைப்பில் நிலவிய தடுப்புச் சுவர்கள், 2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையினால் முற்றிலுமாக அகற்றப் பட்டுள்ளன. இதனால், வாழ்க்கை முழுவதற்குமான கல்விப் பிரிவை, 15 வயதிலேயே தேர்ந்தெடுக்கும் கட்டாயத்தில் இருந்து, குழந்தைகள் விடுவிக்கப் பட்டுள்ளனர். புதிய கல்விக் கொள்கையை தொடர்ந்து, 2021ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட நிபுண் பாரத் திட்டத்தின் கீழ், 3ஆம் வகுப்பிற்குள்ளாகவே குழந்தைகளுக்கு அடிப்படை எழுத்தறிவு, மற்றும், எண்ணறிவு கிடைப்பதை உறுதிப்படுத்த, முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. இத்திட்டமும், 1ஆம்



வகுப்பை எட்டுவதற்குள் அதற்கான தயார் நிலைக்கு குழந்தைகள் மேம்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கிலான வித்யா ப்ரவேஷ் திட்டமும் இணைந்து, இதுவரை நாடு முழுவதும், 8.9 லட்சம் பள்ளிகளைச் சேர்ந்த

சுமார் 4.2 கோடி குழந்தைகளை எட்டி உள்ளன. 1968ஆம் ஆண்டிற்கு பின்னர், நாட்டின் பள்ளிக் கல்வித் துறையில், பெரும் மாற்றங்களை கொண்டு வருவதில், தேசிய கல்விக் கொள்கை முக்கிய பங்காற்றி இருப்பதில் ஐயமில்லை.

------------------------

## யுபிஐ நீதிமன்றம் (13)

யுபிஐ மூலம் தனிநபர்கள், 2 ஆயிரம் ரூபாய்க்கு மேல், வணிகர்களுக்கு பணம் வழங்கும் பரிவர்த்தனைகள் மீது, எம்டிஆர் கட்டணம் விதிப்பதான மத்திய அரசின் முடிவை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது. இதை, சட்டப் பிரச்சனை என்பதை விட, தொழில்நுட்ப பிரச்சனையாகவே கருத வேண்டி இருப்பதாக, தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த், நீதிபதிகள் திரு. ஜோய் மால்யா பாக்ச்சி, திருமதி வி. மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று தமது உத்தரவில் கூறியது. பிரச்சனை குறித்த மனு மீது, மத்திய அரசும், இதர பிரதிவாதிகளும் 4 மாதங்களுக்குள் தங்களின் பிரதான பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். அரசின் முடிவினால், 96 சதவிகித யுபிஐ பயனாளிகளுக்கு எந்த பாதிக்கும் இராது என்று, கூடுதல் தலைமை அரசு வழக்கறிஞர் திரு. என். வெங்கட்ராமன் முன்னதாக, நீதிமன்றத்தில் கூறினார்.

------------------------

## ஆசிய விளையாட்டு (12)

ஜப்பானில் நடைபெறும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் மகளிர் 25 மீட்டர் தனிநபர் பிஸ்டல் பிரிவில், இந்தியாவின் ஈஷா சிங், வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். 400 மீட்டர் மகளிர் தடையோட்டப் பிரிவில், வித்யா ராம்ராஜ், 78 கிலோவிற்கு உட்பட்டவர்களுக்கான குராஷ் மல்யுத்தப் பிரிவில், பிங்கி பல்ஹாரா ஆகியோர், வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் ஆடவர் பிரிவில், இன்று, இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான, காலிறுதிப் போட்டி, சாதகமற்ற வானிலை காரணமாக கைவிடப்பட்டதை தொடர்ந்து, ஐசிசி தரவரிசைப் பட்டியில், முதல் இடத்தில் இருப்பதன் அடிப்படையில், இந்தியா, அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. மகளிர் மல்யுத்தப் பிரிவுகளிலும், இந்தியாவின் லவ்லினா போர்கோஹைன், பிரியா கங்காஸ் ஆகியோர், அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளனர்.

------------------------

## மாண்டவியா-சமூக பாதுகாப்பு 1 (6)

நாட்டில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், சமூக பாதுகாப்புத திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் விருதுகள் குறித்து, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தேசிய மாநாட்டில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

## மாண்டவி ா-சமூக பாதுகாப்பு 2 (12)

(வாய்ஸ்)

நாட்டில் 80 கோடி பேருக்கு இலவச உணவு தானியங்களும், 60 கோடி பேருக்கு 5 லட்சம் ரூபாய் வரையிலான மருத்துவ காப்பீட்டு வசதிகளும், 25 கோடி பேருக்கு, இஎஸ்ஐ சுகாதார வசதிகளும் வழங்கப் படுவதாக மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். விவசாயிகள், மற்றும், பெண்களுக்கு நிதி உதவி வழங்கப் படுவதையும் அவர் சுட்டிக் காட்டினார். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் அதே வேளை, தொழிலாளர் நலன்களையும் பாதுகாப்பதன் மூலம், தொழில் வளர்ச்சியை நீடித்த வளர்ச்சியாக மேம்படுத்தும் நோக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், தொழிலாளர்கள் உட்பட, அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

------------------------

புதுச்சேரி விமானம் (9)

புதுச்சேரியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. செந்தில்குமார், மற்றும், ரிவாச் ரவுண்ட் டேபிள் 104 அமைப்பினரின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டின் கீழ், பாகூர் அன்னுசாமி மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 20 பேர், , முதல் முறையாக, கொல்கத்தாவிற்கு ஒருநாள் பயணம் மேற்கொண்டு திரும்பி

உள்ளனர். கல்வி மற்றும் விளையாட்டில் சிறந்த இம்மாணவர்களுடன், சட்டமன்ற உறுப்பினரும், கொல்கத்தாவிற்கு பயணம் மேற்கொண்டு, அங்குள்ள சுற்றுலா தலங்கள், மற்றும், வரலாற்று சின்னங்களை சுற்றிக் காட்டினார். பயணத்தின் சிறப்பம்சமாக, கிரிக்கெட் வீரர் கங்குலியை சந்தித்து பேசும் வாய்ப்பை மாணவர்கள் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

ஏனாம்-சேவை (8)

ஏனாமில், காவல், சுகாதாரம், சமூக நலம், வேளாண்மை, மீன்வளம், குடிமைப் பொருள் வழங்கல் உட்பட, பல்வேறு அரசு துறைகள் இணைந்து, டாக்டர் கே.ஆர்.என். அரசு உயர்நிலைப் பள்ளியில் இன்று நடத்திய, சேவா சங்கல்ப முகாமில், அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் குறித்த தகவல்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. அரசுத் திட்டங்களில், மக்கள் சேர்ந்து கொள்வதற்கான வசதிகளும் முகாமில் இடம்பெற்றன. மண்டல நிர்வாக அதிகாரி திரு. சிவராஜ் மீனா மேற்பார்வையின் கீழ் இம்முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

------------------------

ஏனாம் (12)

ஓடிசாவில், கோதாவரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், கோதாவரியின் கிளை நதியான கௌதமி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஏனாம் பகுதியிலும், வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஏனாமில், பிரான்ஸ்திப்பா, குரசம்பேட், குருகிருஷ்ணாபுரம், அய்யண்ணா நகர்

உள்ளிட்ட இடங்களில், வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. ஃபெரி சாலையிலும், வீடுகளுக்குள் மழை நீர் புகுந்து இருப்பதாக, எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார். கோதாவரியில் வினாடிக்கு 9.7 லட்சம் கனஅடி நீர் பாய்வதால், செவ்வாய்க் கிழமை வரை, தாழ்வான பகுதிகளில் வெள்ளத்தின் தாக்கம் இருக்கலாம் என, ஆந்திர நீர்ப்பாசன துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். நிலவரங்களை சமாளிக்க, ஏனாம் நிர்வாகம் உரிய ஏற்பாடுகளை செய்து வருகிறது.

------------------------

ரேபிஸ் (12)

உலக ரேபிஸ் தினத்தை முன்னிட்டு விழுப்புரத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஹரிதாஸ் தொடக்கி வைத்தார். தமிழ்நாடு கால்நடை பாராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் மோகன், மாவட்ட விலங்குகள் நல அலுவலர் டாக்டர் செல்வமுத்து உள்ளிட்டோர், தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். பாண்டிச்சேரி ரோட்டரி கிளப் உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டு இருந்து இப்பேரணியில், கால்நடை மருத்துவர்கள், மாணவர்கள் உட்பட, சுமார் 150 பேர் கலந்து கொண்டு, ரேபிஸ் நோயின் அபாயங்கள், மற்றும், தடுப்பு முறைகள் குறித்தும், தடுப்பூசியின் முக்கியத்துவம் குறித்தும், விழிப்புணர்வு பிரசுரங்களை வினியோகித்தனர். பேரணியின் போது, செல்லப் பிராணிகள், மற்றும், தெரு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

------------------------

## வானிலை (14)

இன்று, திருவண்ணாமலை, திருப்பத்தூர், திருச்சி, திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும், வேலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, சேலம், அரியலூர், பெரம்பலூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. அக்டோபர் 4ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்கக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டியில், 4 செ.மீ மழை பதிவாகி உள்ளது.

-----------------------

## பேரிடர் மேலாண்மை (14)

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், இன்று, 22ஆவது நிறுவன நாளை கொண்டாடுகிறது. பேரிடர் மேலாண்மை குறித்த அறிவு, கொள்கை, மற்றும், தயார் நிலையை செயல்பாட்டில் கொண்டு வருவதற்கான கூட்டு முயற்சிகள் என்ற கருப்பொருள் அடிப்படையில், ஆணையம் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இத்தகைய நிகழ்ச்சி ஒன்றில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கூடுதல்

செயலர் திரு. அனுராஜ் ஷர்மா பேசுகையில், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் நாட்டின் பேரிடர் மேலாண்மைத் துறையில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், குறிப்பாக பேரிடர் சம்பங்கள் தொடர்பான உதவி-மீட்பு வசதிகள் பெருமளவு மேம்பட்டுள்ளதாகவும் கூறினார். இயற்கை பேரிடர்களால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில், படிப்படியாக குறைந்து வருவதை அவர் சுட்டிக் காட்டி, இதை, பூஜ்யமாக குறைக்க, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கு இடையே ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவை என வலியுறுத்தினார்.

------------------------

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

மக்கள் தொகை கணக்கெடுப்பில் பங்கேற்று, உரிய தகவல்களை வழங்க, ஒவ்வொருவரும் நேரம் ஒதுக்க வேண்டும் என,பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் கல்வித் துறையில், பெரும் மாற்றங்களை கொண்டு வருவதில், தேசிய கல்விக் கொள்கை முக்கிய பங்காற்றி வருகிறது.

குறிப்பிட்ட யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் விதிப்பதான மத்திய அரசின் முடிவை நிறுத்தி வைக்க, உச்சநீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

நாட்டில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள், சமூக பாதுகாப்புத திட்டங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக, மத்திய தொழிலாளர் துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.